

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஒன்றியம், பொன்னாபுரம் ஊராட்சி, பொன்னாபுரத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தினை தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர், ஒன்றிய செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்து பயனாளிகளுக்கு பல்வேறு கடனுதவி ஆணைகளை வழங்கினர். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ்ராஜா உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.



கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு வடக்கு மாவட்டம் பவானி சட்டமன்ற தொகுதி, தொகுதி பார்வையாளர் அறிமுகக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் பவானி நகர கழக செயலாளர் ப.சீ.நாகராஜன் முன்னிலையில் பவானி சட்டமன்ற தொகுதி தலைமைக் கழக பார்வையாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் கலந்து கொண்டு தேர்தல் பணிகள் குறித்து சிறப்புரையாற்றினார். நிகழ்வில் பவானி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஊராட்சி கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் BLA2 உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்டம் – பெருஞ்சேரி, சுந்தரப்பன்சாவடி அருகில் நிகழ்ந்த

# சாலை விபத்தில் உயிரிழந்த காவலரின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, அக். 29 -

சாலை விபத்தில் உயிரிழந்த காவலரின் குடும்பத்திற்கு நிதியுதவி அறிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வருமாறு:-

மயிலாடுதுறை மாவட்டம், பாகசாலை காவல் நிலையத்திலிருந்து அயல் பணியாக மயிலாடுதுறை மாவட்ட காவலர் பல்பொருள் அங்காடியில் பணிபுரிந்து வந்த காவலர் பரந்தாமன் (வயது 39) த/பெ. கண்ணன் என்பவர் நேற்று முன்தினம் (27.10.2024) பிற்பகல் சுமார் 2.00 மணியளவில் பணி முடிந்து இருசக்கர வாகனத்தில் பெரம்பூர் காவல் சரகம், பெருஞ்சேரி, சுந்தரப்பன்சாவடி அருகில் சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த அரசுப் பேருந்து எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

காவலர் பரந்தாமன் அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

காவலர் திரு.பரந்தாமன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் காவல் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

ஆலத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளரும், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினருமான

# மறைந்த பாடாலூர் சோமு. மதியழகன் முதலாமாண்டு நினைவு நாள்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. அஞ்சலி!

பெரம்பலூர், அக். 29 -

ஆலத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளரும், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினருமான மறைந்த பாடாலூர் சோமு. மதியழகன் முதலாமாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, பாடாலூரில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்திற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

அதேபோல் செட்டிகுளத்தில் உள்ள சோமு. மதியழகன் உருவப்படத்திற்கு, பெரம்பலூர் மாவட்ட பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் தலைமையிலும், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையிலும் மலர்தூவி மரியாதை செய்யப்பட்டது.

இதில்பாரி மதியழகன், மாவட்ட நெசவாளர் அணி அணி அமைப்பாளர் ஆர். வேணுகோபால், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ. கார்மேகம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர். அருண், மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் கோபாலபுரம் ம. செல்வராசு, பாடாலூர் சரவணன், இரூர் புஷ்பராணி, குரூர் செல்வம், களத்தூர் கண்ணபிரான், ஒன்றிய கழக நிர்வாகிகள் தனலட்சுமி, கிருஷ்ணன், சரவணன், புகழேந்தி, சந்திரமோகன், கிளைக்கழக செயலாளர்கள் அணி பொறுப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மேல்மலையனூர் ஒன்றியத்தில்

# ரூ 31.56 லட்சத்தில் புதிய நாடக மேடை - ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

செஞ்சி அக் 28-

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் செவலபுரை ஊராட்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் 8.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நாடக மேடை கட்டிடமும், கொடுக்கன் குப்பம் ஊராட்சியில்தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 23.56 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட புதிய ஊராட்சி மன்ற கட்டிடம் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் செவலபுரையில் புதிதாக கட்டப்பட்ட நாடக மேடையையும்,கொடுக்கன் குப்பம்ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்ட ஊராட்சி மன்ற கட்டிடத்தினை செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான்மக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளனர்.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர்கள் சசிகலா சங்கர், பூ சுந்தரி சுந்தர ராஜன் ஆகியோர்முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 31.56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நாடக மேடை மற்றும் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு அவர் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில்வட்டார வளர்ச்சி அலுவலர் சையத் முகமது,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், ஒன்றிய செயலாளர்கள் நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன், ஒன்றிய கவுன்சிலர்கள்காசியம்மாள் கோதண்டம், ரவிச்சந்திரன். ராஜா,முன்னாள் கவுன்சிலர் ராஜேந்திரன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஜி.பி.எஸ். முருகன் ஒன்றிய அவைத் தலைவர் ஆறுமுகம்,உதய குமார்,துணைச் செயலாளர் ரகுராமன், நிர்வாகிகள் அரிதாஸ், எஸ்.பி.சம்பத், தோப்பு சம்பத்,செவலபுரை பூண்டி சங்கர்,இளையபெருமாள் திருமலை, நவின், நித்தீஷ், கொடுக்கன் குப்பம் சுந்தர் ,பச்சையப்பன், செல்வராஜ்,வீரமணி, ஏழுமலை, ரங்கசாமி, துரைசாமி, மாணிக்கம், கலைச்செல்வன்உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கோவை வடக்கு மாவட்டத்தில் கவுண்டம்பாளையம் பகுதியில் 35 வது வார்டில் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களுடைய ஆலோசனையின் பேரிலும் மாவட்டச் செயலாளர் தொ.ஆ.ரவி ஒத்துழைப்புடனும், இங்கே பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் சுமார் நூறு பேருக்கு மேல் உள்ள ஆண் – பெண் பாலாருக்கு, வேஷ்டி சட்டை, சேலைகள், தீபாவளி செலவுக்கான பணம் முடிப்பு, 35 வது வார்டின் மாமன்ற உறுப்பினர் சம்பத் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது. 35 வது வட்டக் கழக அவைத் தலைவர் சோ.துரைப்பாண்டியன் தலைமையில், வட்டக் கழக செயலாளர் ஆர்.குமரேசன் முன்னிலையில், சிறப்பு விருந்தினராக முன்னாள் கவுண்டம்பாளையம் பகுதி செயலாளர் மதியழகன் மற்றும் மூத்த முன்னோடி பாலசுப்ரமணியம் ஆகியோர் கலந்து கொண்ட, இந்நிகழ்வில் மாநகராட்சியின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வடுவூர் இரா.சாமிநாதன்

### அக்டோபர் 29 (2013)



அரசு பள்ளி ஆசிரியராக பணியாற்றிய போது,கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, அதன் காரணமாக ஆசிரியப் பணியை துறந்து கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வடுவூர் கிளைச் செயலாளர், நீடாமங்கலம் ஒன்றிய அவைத்தலைவர் – செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

மன்னார்குடி நிலவள வங்கித் தலைவராக பதவி வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

ஒன்றிய கழக விவசாய அணி முன்னாள் துணை அமைப்பாளர்

# வடபாதி ஆர்.எஸ்.அன்பழகன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், அக். 29 -

திருத்துறைப்பூண்டி ஒன்றிய விவசாய அணியின் துணை அமைப்பாளராக இருந்த வடபாதி ஆர். எஸ்.அன்பழகன் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாருக்கு வயது 63.



கழகத்தின் மூத்த உறுப்பினரான வடபாதி ஆர். எஸ்.அன்பழகன் கிளைக்கழக, ஒன்றியகழக பொறுப்புகளில் திறம்பட பணியாற்றியவர்.

அவருக்கு சாந்தி என்கிற மனைவியும், தென்னரசன், கலையரசன் என்கிற மகன்களும் உள்ளனர். மறைவு தகவல் அறிந்த கழக நிர்வாகிகளும், கழகத்தினரும், பொதுமக்களும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த வடபாதி ஆர். எஸ்.அன்பழகன் அவர்களின் இறுதிச்சடங்கு இன்று (29.10.2024 -செவ்வாய்) காலை 11 மணியளவில் திருத்துறைப்பூண்டி ஒன்றியம் வடபாதியில் நடைபெறும்.

எஸ்.ஜி.மாதவன் நிகழ்ச்சி ஏற்பாடு! காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

# மதுரவாயல் 147 வது வட்டத்தில் பள்ளிக் கட்டிடம் - இல்லம் தேடி இலவசப் பட்டா!

## வே.ராஜன் எம்.சி. முன்னிலை! ரமணி மாதவன் எம்.சி. தலைமை!

சென்னை, அக். 29–

கழகப் பொருளாளர், மாநிலங்களவைக் குழுத் தலைவர், திருப்பெரும்பு தூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அறிவுறுத்தலின் படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, வளசரவாக்கம் 147 வது வார்டுக்கு உட்பட்ட கங்கா நகர் அரசு உயர்நிலைப்பள்ளியில் மதுரவாயல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 40 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டுவதற்கு (28.10.2024– திங்கட்கிழமை) காலை 8.30 மணிக்கு, அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியும் தொடர்ந்து கங்கா நகர் மாநகராட்சி பூங்காவில், இல்லம் தேடி இலவச வீட்டு மனைப் பட்டா வழங்க மனுக்கள் பெறப்படும் முகாமும் நடைபெற்றது.

இந்நிகழ்வை மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், எம்.ஜி.ஆர்.பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி துவக்கி வைத்தார்.

நிகழ்வில் 11 வது மண்டலம், வளசரவாக்கம் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. முன்னிலை வகித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி

### அக்டோபர் 29 (1995)



திருச்சி நகரக் கழகச் செயலாளராகவும் – நகர கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் பணியாற்றியவர்.

திருச்சி வெங்காயமண்டி பாரம் சுமக்கும் தொ.மு.ச. தலைவராகவும் – அண்ணா சிந்தனையாளர் பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

ஆங்கிலத்தில் சிறப்பாகச் சொற்பொழிவாற்றக்கூடியவர்.

கொள்கை உறுதியும் – அடக்குமுறைகளைத் தாங்கும் நெஞ்சுரமும் கொண்டு திருச்சியில் கழகத்தை வளர்த்த இனிய உடன்பிறப்பு என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.